**01.**

சீயோனைத் தேற்றுவார் இயேசு
அவர் அழைக்கிறார் மகனே தேற்றிடுவார்

பள்ளங்கள் மலைகள் சமமாகும் (2)
உன் கவலைக் கண்ணீர் களிப்பாய் மாறும் (2)
--சீயோனை

வறண்ட நிலம் பாலை ஏதோனாய் மாறும்
உன் துக்கங்கள் சாபங்கள் ஆசீராய் மாறும்
--சீயோனை

வியாதிகள் வருத்தங்கள் மாற்றிடுவார்
உன் மன நோய்கள் யாவையும் போக்கிடுவார்
--சீயோனை
உன் இயேசு உன்னை நடத்திச்
கன்மலை மேலே நிறுத்திடுவார் --சீயோனை

கடன் தொல்லை கஷ்டங்கள் மாற்றிடுவார்
தன் கண்மணிபோல் உன்னை காத்திடுவார்
--சீயோனை

**02.**

திருப்பலி திருப்பலி
திருந்தி வாழ உன்னை அழைக்கும் திருப்பலி
திடப்படுத்த உன்னை அழைக்கும் திருப்பலி
திட்டங்களை வெளிப்படுத்தும் திருப்பலி

ஆபிரகாம் செலுத்தினார் அன்பு பலி
ஆயிரமாய் ஆசீரைப் பெற்ற பலி
எலியாவோ செலுத்தினார் எரி பலி (2)
எரி நெருப்பு வானின்று வந்த பலி ...திருப்பலி

இன்று நீ பங்கெடுக்கும் திருப்பலி
இதுவே உன் வாழ்வின் முதற்பலி
இதுவே உன் வாழ்வின் இறுதிப்பலி
இதுவே நீ பகேற்கும் ஒரே பலி ...திருப்பலி

**03.**

எனக்கு எல்லாம் நீங்கதான் இயேசையா
என்னுயிரும் நீங்கதான் இயேசையா
உங்க இரக்கம் இல்லாம யார் இரக்கம்
வேணும்(2)

உங்க அன்பு இல்லாம யார் அன்பு வேணும்(2)
எனக்கு எல்லாம் நீங்கதான் என்னுயிரும்
நீங்கதான்

மலைகள் போல மனிதர்கள் நிமிர்ந்து நின்றாலும்
உண்மையான உதவி உம்மில் தானய்யா
எனக்கு எல்லாம் நீங்கதான் என்னுயிரும்
நீங்கதான்

நான் அமர்வதும் எழுவதும் உங்களாலதான் (2)
நான் நடப்பதும் படுப்பதும் உங்களாலதான்
எனக்கு எல்லாம் நீங்கதான் என்னுயிரும்
நீங்கதான்
என்னை அழைத்தவர் உண்மை... உள்ளவர் நீரே(2)
அனுதினமும் சாட்சியாக நடத்திடுவீரே (2)
எனக்கு எல்லாம் நீங்கதான் என்னுயிரும்
நீங்கதான்

நண்பர் என்னை கைவிட்டாலும் நீங்க
இருக்கீங்க(2)
கைவிடாத நல்ல தெய்வம் நீங்கதானையா (2)
எனக்கு எல்லாம் நீங்கதான் என்னுயிரும்
நீங்கதான்

04.

சோர்ந்து போகாதே இஸ்ராயலே
தளர்ந்து போகாதே யாக்கோபே யாக்கோபே

உன்னைப் படைத்தவர் பார்க்கின்றார் - நீ
காணாமல் போனார் துடித்திடுவார்
என் கண்ணே மணியே அன்பே அமுதே
என்றுனை தேற்றிடுவார் - நீ வா தேற்றிடுவார்
சோர்ந்து போகாதே

உன் நினைவெல்லாம் அறிகின்றார் .. உன்
உள்ளத்தை காண்கின்றார்
உன் வாஞ்சையும் தாகமும் வேதனை வேதனை
எல்லாம் அறிகின்றார் - நீ வா அணைக்கின்றார்
சோர்ந்து போகாதே

நீ இயேசுவின் மகன் என்றால்
உன்னில் இருப்பவர் பெரியவர்
இந்த நோயோ கடனோ கண்ணீரோ
என்ன செய்யக் கூடும் - உன்னை என்ன
செய்யக்கூடும்  சோர்ந்து போகாதே

05.

நிம்மதி தரும் இயேசு
நிறை வாழ்வை தருகிறவர்
உன்னை அழைக்கிறார்
உன்னை உற்றுப் பார்க்கிறார்

நீ தனிமையில் கதறினாயோ
உன் கண்ணீரை இயேசு கண்டார் (2)
யாருமில்லையே என்று சொன்னாயா (2)
கைவிடாத இயேசு உண்டு கலங்கிப் போகாதே (2)

நீ நன்மை செய்ய தீமையானதோ
தீமையிலும் நன்மை செய்வார் (2)
ஏன் பாடுகள் எனக்கென்றாயா? (2)
இயேசுவின் அருள் போதும் கலங்கிப் போகாதே(2)

06.

உமதன்பு பெரிதைய்யா
உமதிரக்கம் உயர்ந்ததையா
கடல் ஆழத்தைக் காட்டிலும்
வானத்தைப் பார்க்கிலும் உமதன்பு பெரிதையா

மலைகள் விலகினாலும் குன்றுகள் நகர்ந்தாலும்
விலகாத நகராத உமதன்பு போதுமைய்யா

பெற்றத் தாய் மறந்தாலும் உன் தந்தை
கைவிட்டாலும்
மறவாத மாறாத உம்தன்பு போதுமையா

உன் நண்பன் மறுத்தாலும் உடன் பிறந்தோர்
வெறுத்தாலும்
மறுக்காத வெறுக்காத உம் அன்பு போதுமையா
சிலுவையில் தொங்கினீரே உம் அன்பை
கண்டேனே
எனை மீட்ட சிலுவை அன்பொன்றே
போதுமையா

07.

அழுகிற மகனே கதறி அழுகிற மகனே
அழுகிற மகளே கதறி அழுகிற மகளே
இந்த உலகமோ உன்னைப் பார்த்து சிரிக்கிறதோ
உன் துயரமோ மகிழ்ச்சியாக மாற்றிடுவாரே -
இயேசு

கண்ணீரை களிப்பாக மாற்றிடுவாரே
மனிதன் பார்ப்பது உன் வெளித்தோற்றம் தான் (2)
இயேசு பார்ப்பதோ உன் உள்ளம் மட்டும்தான் (2)
- அழுகிற மகனே

உங்களை இன்று எதிர்ப்பவரே (2)
உங்கள் சார்பாய் நாளை பேசுவாரே (2)
- அழுகிற மகனே

பணம் இருந்தால் பத்து பேரும் தேடி வருவார் (2)
பதவி இருந்தால் பலரும் ஓடி வருவார் (2) -
-அழுகிற மகனே

8.
என் இயேசு ராஜா என்னோடு இருக்க
எனக்கொன்றும் பயமில்லையே - அவர்
என்னோடு வருவார் எனை நடத்தி செல்வார்
எனக்கென்றும் அச்சமில்லையே

அவர் வருவாரே அவர் தருவாரே
ஆனந்தம் ஆனந்தமே - என்றும் (2)
மரண பள்ளத்தாக்கிலே நடந்தாலும்
கூடவே வருவீரே
சிங்கத்தின் குகையில் படுத்தாலும்
என்னோடு இருப்பீரே - அவர் வருவாரே

ஆயிரம் எதிரிகள் எதிர்த்தாலும்
எனக்காக யுத்தம் செய்வீர்
எதிரிகள் முன்பு விருந்தொன்றை
எனக்காக வைத்துள்ளாரே - அவர் வருவாரே

மாலையில் கண்ணீரோடு அழுவாயோ
காலையில் அக மகிழ்வாய்
மாலையில் பசியாய் நடந்தாலும்
புது மன்னாவை கொடுப்பீரே - அவர் வருவாரே

இயேசுவை மட்டும் நம்மியுள்ளேன்
என்னை மறக்க மாட்டார்
சிக்கென்று அவரைப் பற்றிக் கொண்டேன்
இனிமேல் விழமாட்டேன் - அவர் வருவாரே

09.
அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா (2)
அக்கினியாம் ஆவியே பரிசுத்த ஆவியே
அக்கினியாம் எங்கள் மேல் இறங்கிடுமே -
அல்லேலுயா

வல்லமையாம் ஆவியே பரிசுத்த ஆவியே
வல்லமையாய் எங்கள் மேல் இறங்கிடுமே -
அல்லேலுயா

ஜீவ ஊற்றாம் ஆவியே பரிசுத்த ஆவியே
ஜீவ ஊற்றாய் எங்கள் மேல் பொங்கிடுமே -
அல்லேலுயா

10.
கவலை ஏன் கலக்கம் ஏன் மகனே
கவலை ஏன் கலக்கம் ஏன் மகனே
உன் கண்ணீரைத் துடைப்பவர்
கரம் பிடித்து நடத்துவார்

அழாதே நீ அழாதே(2)
ஒருபோதும் கைவிடமாட்டார் - உன்னை
ஒரு போதும் கைவிடமாட்டார் - இயேசு (2)

கோலியாத்து கத்தி ஏந்தி எதிர்த்து வந்தாலும் (2)
முறியடிப்பாரே வெற்றி ஆர்ப்பரிப்போமே (2) -
கவலை ஏன்

செங்கடல் போல் பிரச்சனைகள் எதிர்த்து
நின்றாலும் (2)
பிரித்திடுவாரே பாதை கொடுத்திடுவாரே (2) -
கவலை ஏன்

எரிகோ போல் வேதனைகள் உயர்ந்து நின்றாலும்
உடைத்திடுவாரே உன்னை உயர்த்திடுவாரே -
கவலை ஏன்

11.
இழந்து போன ஆசீர்வாதங்கள்
இரட்டிப்பாக இயேசு தருவார்
மனம் மாறி வா மனம் திரும்பி வா
மகனே மகளே
இயேசு அழைக்கிறார் - உன்னை

தேவ பலன் பெற்ற சிம்சோன்
தெலீளாள் மடியில் - அவன்
இழந்து போனான் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை
கண்ணீரோடு கதறினான் மன்மிரங்கும் என்று (2)
இரட்டிப்பான தேவ பெலன்
பெற்றுக்கொண்டாரே(2) - இழந்து

தேர்ந்து கொண்ட பேதுருவோ
பொல்லார் நடுவில்
மறுதலித்தார் மூன்று முறை இயேசு
கிறிஸ்துவை
மனம் கசந்து கண்ணீர் விட்டார் மன்னியும் என்று
திருச்சபையின் தலைவராக மாற்றப்பட்டாரே -
--இழந்து

உலகின் பின்னே ஓடித்திரிந்த ஊதாரி மைந்தன்
பன்றியின் உணவுக்காக அலைந்து திரிந்தான்
கண்ணீரோடு கதறினான் மன்னியும் என்று
அரவணைத்த அப்பா ஆசீர் அளித்தரே - இழந்து

12.
போதும் போதும் பாவ வாழ்கை
வேண்டும் பரிசுத்த வாழ்கை

எந்தன் வாழ்வைக் கொடுத்து விட்டேன்
இயேசுவின் கரங்களிலே
உந்தன் சித்தமாய் என்னை வனையும்
இயேசு குயவனே
ஆவி ஆத்மா சாரிரம் உந்தன் கையில்
இயேசைய்யா
ஆளுகை செய்து நடத்திடும் எந்த நாளும்
இயேசையா - போதும் போதும்

வாழ்ந்த வாழ்கை போதுமே இனி வாழ்வது
நானல்ல
வாழ்நாளெல்லாம் உம்மை நினைத்து வாழ்வேன்
உமக்காக
வாழ்வும் வழியும் ஒளியும் எல்லாம் நீரே
இயேசையா
வழி நடத்தி செல்லுமே என்றும் உம் சாட்சியாய்
No No No பாவவாழ்கை No No No
Yes Yes Yes பரிசுத்த வாழ்கை Yes Yes Yes
அல்லேலுயா ஆமேன் அல்லேலுயா (2) - போதும்
போதும்

13.
ஏலே லோ ஏலே லோ ஐலேசா (2)
ஏலேலோ... ஏலேலோ ஏலேலோ(2)

என்னை மீட்ட என் இயேசு
என்னோடு இருக்கிறார்
நல்லவர் வல்லவர் நம் இயேசு
காண்பவரே காப்பவரே - ஏலே லோ

வேதனை சோதனை வேளையிலே
வசனத்தாலப் பேசுவார்
இன்பத்தில் துன்பத்தில்
தூக்கி என்னை நடத்திடுவாரே - ஏலே லோ

வெந்து நொந்து போன வேளையில
வெளிச்சத்தில் நடத்துவார்
என் கண்ணு கலங்கும் வேளையில
கண்ணீரைத் தொடைப்பார் - ஏலே லோ

14. இரத்தம் சிந்தி மீட்டத் தேவா...
கல்வாரி இயேசு நாதா... நீ...
காயப்பட்டு எம்மை மீட்க்கவா...
கல்வாரியில் தொங்கினீரையா...
பேச முடிந்தும் பேசவில்லையே
என் மீது அவ்வளவு நேசமோ
கத்தினீரையா... கதறினீரையா...
என் பாவம் போக்க மரித்தீரோ....

அழகு முகமும் அழகு இழந்ததேன்
என் சிந்தை மாற்ற முள்முடியோ?
தாகம் என்றீரே... தததளித்திரே...
என் வாழ்வு மாற உம்மைத் தந்தீரே
எங்கு செல்வேன்? என்ன சொல்வேன்
என் நேசர் என் மீது வைத்த அன்பை
மனம் மாறவே மனம் திரும்பவே
எனக்காக கதறும் கல்வாரி நாயகா

15.
நல்லவர் இயேசு நம்
உள்ளம் அறிவார்
உணர்வுகள் தெரிவார்

உலகம் அவரை ஏற்றுக் கொள்ளாது
அவரை சார்ந்தோரை ஏற்கவே செய்யாது
கலங்கிடாதே மனமே
திகைத்திடாதே மனமே (2)

உன்னை அழைத்தவர் உன்னோடு தானே
கலங்கின உன்னை அவர் கரை சேர்ப்பாரே
கண்மணி போல உன்னைக் காத்துக்கொள்வாரே

கலங்கிடாதே மனமே
திகைத்திடாதே மனமே (2)

16.
பரிசுத்தம் தாங்க என் இயேசையா
பெலவீனமாய் வாழ்கிறேன் பரிசுத்தம் தாங்க
பரிசுத்தம் தாங்க ஐயா பரிசுத்தம் தாங்க
பரிசுத்தம் தாங்க இயேசையா பரிசுத்தம் தாங்க

செய்ய நினைக்கும் நன்மையை செய்ய முடியல
- நான்
செய்யக்கூடா தீமையைச் செய்கிறேனே
எழ முடியல எழுந்திருக்க உதவி செய்யுங்கையா
என்றும் உம் சாட்சியாய் நடத்திடுங்கையா

காணக் கூடா காட்சியெல்லாம் காண்கிறேனே -
நான்
கட்டவிழ்ந்த காளைப் போலத் திரிகிறேனே
எழ முடியல எழுந்திருக்க உதவி செய்யுங்கையா
என்றும் உம் சாட்சியாய் நடத்திடுங்கையா